ConnectABILITY
A project of Community Living Toronto

# சேர்ந்தே கற்போம் படிப்படியாக செல்லும் வழி

டொரன்டோ நகரம்/ ஆரம்ப குழந்தைப்பருவ சேவைகள் குழு: டொரன்டோ சமூக வாழ்க்கை/ சர்ரே பிளேஸ் மையம்

*குறிப்புப் பக்கம்*

# டிரவுசர் அல்லது கால் சட்டை அணிவதன் செயல் முறை வரிசை

புதிய திறமைகளை கற்றுக்கொள்ளும் போது, பெரும்பாலான குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகிறது. அந்த வழி முறைகளை சிறிது சிறிதாகப் பிரிப்பதனால், குழந்தை ஒவ்வொரு வழி முறையாக கற்க முடியும். ஒரு குழந்தையைப் பொருத்தே அந்த வழிமுறைகளைப் எத்தனை சிறு பாகங்களாக பிரிப்பது என்பது அமையும்.

உங்களுடைய குழந்தைக்கு ஒரு தொடர் படக்காட்சியை அளிக்க விரும்பலாம். இது அடிப்படையாக தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும். நீங்கள் நிஜமான புகைப்படங்களையோ, வரி வடிவங்களையோ, அல்லது படக் குறிப்புகளையோ பயன்படுத்தலாம். படக் காட்சித் தொடரைப் பயன்படுத்தும்போது, உங்களுடைய குழந்தையின் கண் பார்வையில் படும்படியாக அமையுங்கள். அந்தப் படத்தைக் குறிப்பிட்டு அதன் வழி முறைகளை உரக்கப்படித்துக் காட்டுங்கள்.

உங்களுடைய சொந்த செயல் முறை வரிசை விளையாட்டை உருவாக்க படங்களை பயன்படுத்தலாம். அந்தப் படங்களின் பிரதியை எடுத்து, பின்னர் அவற்றை வெட்டி எடுத்து, அவற்றை வரிசைப்படி வைக்க உங்களுடைய குழந்தைக்கு பயிற்சி கொடுங்கள். அந்த படங்களை இரண்டு பிரதியாக எடுத்து, ஒரு தொகுதியை வரிசைப்படி அட்டையில் ஒட்டிவிடவும்,அதை பயன்படுத்தி, மற்றொரு பகுதியை உங்களுடைய குழந்தையை சரியாக வரிசைப்படுத்த வையுங்கள்.

***வீட்டில் பயன்படுத்துவதற்கான "கால்சட்டை அல்லது டிரவுசர்" அணிவது எப்படி என்பதன் செயல்முறை வரிசையின் உதாரணம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது:***

கால்சட்டையைப் பிடித்துக் கொள்ளவும்



இடுப்புப் பட்டியை விரிக்கவும்.



வலது காலை, வலது கால் குழாயில் நுழைக்கவும்.



இடது காலை, இடது கால் குழாயில் நுழைக்கவும்.



இடதுகாலை மேலே
தூக்கினால் இடது கால் குழாய்
அதனுள் நுழைந்து விடும்.



இடுப்புப் பட்டியியைக் பிடித்துக் கொண்டு
கால் சட்டையை மேலே இழுக்கவும்.*



*கவனிக்க: 1 முதல் 6 வயதுடைய குழந்தைகளை உட்காரவைத்தும், 7 மற்றும் அதற்கு மேலும் உள்ளவர்களை நிற்கவும் வைக்கவேண்டும்